ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# அம்பையின் சிறுகதைகளில் பெண்ணியப் பார்வை

**க. ஜகதீஸ்வரி**

**இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை**

**S.D.N.B. வைணவக் கல்லூரி**

**குரோம்பேட்டை, சென்னை-44.**

24

**ஆய்வுச் சுருக்கம்**

அம்பையின் சிறுகதைகளில் பெண்கள் தங்கள் வாழ்வில் குடும்பமாகட்டும், சமூகமாகட்டும் எதிர்கொள்ளும் சிந்தனைகள், தவிப்புகள், ஏக்கங்கள், போராட்டங்கள், கூக்குரல்களை – பெண் படைப்புகள் வழியாகப் பதிவு செய்துள்ளார். தாங்கள் பெற விரும்பும் சுதந்திரத்திற்காக அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை எவ்வாறு கையாளுகின்றனர் என்பதை அவர் தன் படைப்புக்கள் மூலம் பதிவு செய்துள்ளார்.

புத்திலக்கியத்தின் முதல் படைப்பாளிகளில் மிகச்சிறந்தவர் அம்பை அவர்கள் அரை நூற்றாண்டுகளாக எழுதி வருபவர்களுள் ஒருவர் அவர். இதுவரை பெண்களுக்கு மறுக்கப்பட்டவற்றை கேள்விகளாக மாற்றும் உலகின் புதிய குரல் அவருடையது. பெண்கள் அடுப்பங்கரையிலும், கதவுகளுக்குப் பின்னும், துன்பப்பட்டு அவதிப்பட்டவர்களை, வீட்டின் முன் அறைக்குக் கொண்டு வந்தவர் இவர். இவரின் படைப்புகள் உடைபட்ட உறவுகளை சமாதானம் ஆகாத சடங்குகளை கேள்விக் கேட்கும் குரல் இவருடையது, உறவுகளால் தூக்கி எறியப்பட்டவர்கள் தாங்களாக தனியாக எழுந்து நின்று பார்க்கும் பார்வை இவருடையது. கண்ணீர் கேவல்களால், துன்பங்களால், அவதிப்படுபவர்களை – ஒதுக்கும் சமூகத்திடம் இருந்து – எதிர்கொள்ளும் பார்வை இவருடையது, சமதர்மப் பெண்ணிய வாதிகள் – என்றழைக்கப்படுபவர்கள் சீர்திருத்த பிரச்சாரங்களைச் செயற்பாடாகக் கொண்டிருந்தனர். இவர்களின் பிரச்சாரங்கள் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தப் பயன்பட்டதோடு இயக்கத்தை வளர்ப்பதற்கும் உதவின. இவர்கள் இடைக்காலத் திட்டங்கள் வகுத்துச் செயல்பட்டனர். தங்களுக்கென்று முடிந்த முடிவான திட்டங்களை வைத்துக் கொள்ளவில்லை. அவ்வகையில் அம்மையின் படைப்புகள் சமதர்மப் பெண்ணிய வகையில் அவரின் படைப்புகள் அடங்கும் தாயாக, மகளாக, காதலியாக, தாய்மகளாக இவ்வாறாக ஆணாதிக்க சமூகத்திடம் இருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள எவ்வாறெல்லாம் என்பதை – தான் வளர்ந்து வந்த வாழ்க்கை தனக்கு கிடைத்த பல்கலைக்கழக பேராசிரியர் பதவி ஆய்வு மாணவி எனும் முறையில் புனை கதைகளில் புகுத்தியுள்ளார்.

**கடவுச் சொற்கள்**: பெண்ணியம், தந்தை வழி அடக்குமுறை,தமக்கை,தாய்,மகள் ,மனைவி,காதலி

**முன்னுரை:-** அம்பையின் சிறுகதைகளில் பெண்கள் தங்கள் வாழ்வில் குடும்பமாகட்டும், சமூகமாகட்டும் எதிர்கொள்ளும் சிந்தனைகள், தவிப்புகள், ஏக்கங்கள், போராட்டங்கள், கூக்குரல்களை – பெண் படைப்புகள் வழியாகப் பதிவு செய்துள்ளார். தாங்கள் பெற விரும்பும் சுதந்திரத்திற்காக அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை எவ்வாறு கையாளுகின்றனர் என்பதை அவர் தன் படைப்புக்கள் மூலம் பதிவு செய்துள்ளார்.

புத்திலக்கியத்தின் முதல் படைப்பாளிகளில் மிகச்சிறந்தவர் அம்பை அவர்கள் அரை நூற்றாண்டுகளாக எழுதி வருபவர்களுள் ஒருவர் அவர். இதுவரை பெண்களுக்கு மறுக்கப்பட்டவற்றை கேள்விகளாக மாற்றும் உலகின் புதிய குரல் அவருடையது. பெண்கள் அடுப்பங்கரையிலும்,

கதவுகளுக்குப் பின்னும், துன்பப்பட்டு அவதிப்பட்டவர்களை, வீட்டின் முன் அறைக்குக் கொண்டு வந்தவர் இவர். இவரின் படைப்புகள் உடைபட்ட உறவுகளை சமாதானம் ஆகாத சடங்குகளை கேள்விக் கேட்கும் குரல் இவருடையது. உறவுகளால் தூக்கி எறியப்பட்டவர்கள் தாங்களாக தனியாக எழுந்து நின்று பார்க்கும் பார்வை இவருடையது. கண்ணீர் கேவல்களால், துன்பங்களால், அவதிப்படுபவர்களை – ஒதுக்கும் சமூகத்திடம் இருந்து – எதிர்கொள்ளும் பார்வை இவருடையது.

அம்பை கதைகளில் வரும் பாத்திரம் கதை சொல்பவராக இளவயதுடைய சிறுமியாக, படிக்கும் மாணவியராக, களப்பணியாளராக, பெரியப் பெண்ணாக, நடுவயதுப் பெண்ணாக, அறிவுறுத்துபவராக எனப் பல வயதைக் கடந்தவராக வரும் பாத்திரம் – அதோடு கதைகளில், பின்னிப் பிணைந்த சங்கீதம் பெண்களின் நிகழ்வில், உறவில் தாளலயத்தோடு வெளிப் பட்டிருக்கிறது. "பெரிய அலையாகவும், பிரம்மாண்டதாகவும் பின்னாடி வந்து சேர்வதாகவும் பிறகு குலைந்து போகக்கூடியதாகவும் மீண்டும் எழக்கூடியதாகவும் மூழ்கடிக்கக் கூடியதாகவும் மீண்டும் தூக்கி எறியக் கூடியதாகவும் ஆக்கங்களைக் கொண்ட அம்பையின் மொத்த புனைகதைகளின் உலகம் இது"[1]. புத்தகத்தின் பின் அட்டை – காலச்சுவடு பதிப்பகம் பதிவு செய்துள்ளது.

**ஆசிரியர் வரலாறு:-** அம்பை எனும் டாக்டர், சி.எஸ். லக்ஷ்மி வரலாற்று ஆசிரியர் இவர். புது தில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைகழகத்தில் முனைவர் பட்டம் பெற்று, நாற்பது ஆண்டுகளாகப் பெண்கள் வரலாறு, வாழ்வு, அவர்கள் படும் துன்பம், அத்துன்பக் கூட்டில் இருந்து சுயமாக சிந்தித்து எவ்வாறு அத்துன்பக் கூட்டை உடைத்து வெளியேறுகின்றனர் -- அவர்களின் துன்பத்தை பற்றிய, ஆய்வில் ஈடுபட்டிருப்பவர், இவரின் பெண் இசைக் கலைஞர்கள், பெண் நடனக் கலைஞர்கள் குறித்து இவர் மேற்கொண்ட ஆய்வுகள் 'The Face Behind the Mask', 'The Singer and the Song', 'Mirrors and Gestures எனும் புத்தகங்களாக வெளிவந்துள்ளது, இவரின் படைப்புகள் ஆங்கிலத்தில் ஐந்து தொ'குப்புகளாக வெளிவந்துள்ளது. பல விருதுகளைப் பெற்ற இவர் Sparrow எனும் பெண்கள் ஆவணக் காப்பகத்தை மும்பையில் 1988 இல் நிறுவி அதன் இயக்குநராக செயல்பட்டு வருகிறார்.

"பெண்ணியம் என்பது பெண்களின் சமத்துவத்தையும், முன்னேற்றத் தையும் வலியுறுத்துவது -- பாலியல் சமத்துவம். பெண்ணியம் என்பது பெண்களின் அடிமை நிலையை மாற்ற முற்படும் கோட்பாடு என்பதும் பெண்ணியவாதி என்பவர் பெண்களின் நிலை மாற்றத்திற்காக குரல் கொடுப்பவர் அல்லது பாடுபடுபவர் என்கிறார் பெண்ணியவாதி இரா. பிரேமா அவர்கள்"[2]. அவ்வகையில் அமைந்ததே அம்பையின் சிறுகதைகள்,[3]

**தமக்கை:** சூரியன் கதையில் வரும் அம்மாவின் நடை துரிதமாகியது. புதர்கள் முகத்தைக் கீற அதனுள் தலையை நுழைத்தாள். அம்மா சுருங்கிய விரல்களை அக்காவின் கேசத்தில் துளைத்தாள், முகத்தின் மீது வருடினாள். நெஞ்சின் மீது தட்டினாள். "விலகி இருந்த உடைகளை இழுத்து மூடினாள். என் சின்னப் பெண்ணே என்றவாறு அவளை இழுத்தணைத்து மார்பில் சாய்த்துக் கொண்டாள். அக்காவை அணைத்தவாறே வெகுநேரம் அம்மா அமர்ந்திருந்தாள்"[3]. சூரியன் கதை போர்பூமி பற்றிய கதை. அவளின் பெரிய மகன் போராட்ட வாழ்வில் ஈடுபட்டுள்ளான். அதனால் அவள் குடும்பத்தைப் பழி வாங்க அவனின் அக்காளை தீயவர்கள் கொன்று விடுகின்றனர்.

**மனைவி:** சிறகுகள் முறியும் கதையில் – "அவளுக்கே தெரியவில்லை, அவள் எதற்காக யாருக்காக வாழ்கிறாள். ஆனாலும் வருடா வருடம் தீபாவளிக்குப் பட்டுப் புடவை வாங்காமல் அவள்

விடமாட்டாள். புடவையின் மீது உள்ள ஆர்வத்தினால் அல்ல அது. செலவழித்த பணத்துக்காக அவனை ஏங்கவைக்கும் கேவலமான பழி வாங்குதலுக்காக"[4]. பழி வாங்குவதற்காகவே அவள் பட்டுப்புடவை வாங்கினாள். அவள் யோசிக்கிறாள். தனக்குப் பட்டுப்புடவை வேண்டும் என்று கணவனிடம் கட்டாயப்படுத்தி வாங்கியது – தன் சுயகௌரவம் இழந்து வாங்கியதை நினைத்து அவள் வியந்ததுண்டு. அவன் காசை பலவந்தமாகச் செலவழிக்க வைத்துவிட்ட பயங்கர திருப்தி அவள் எண்ணத்தை மாற்றிவிடும். ஷைலு அம்மா, ஷைலுவிடம் உனக்கு நாக்கு நீளம் சாப்பாடு விஷயத்தில் என்று குட்டுப்பட்டவள். கணவனிடம் சேலம் போகும்போது மாம்பழம் வாங்கி வர வேண்டும் என்றாள். கணவன் அலுவல் பணி முடிந்து வந்தபோது மாம்பழம் கேட்டாள். கணவனோ மாம்பழம் விலை அதிகம் அதனால் வாங்கவில்லை என்று கூறினான் அன்றே ஷைலு தன் நாக்கை அடக்கிவிட்டாள்.

4 ஷைலுவின் நாத்தனார் சரோஜா கேட்கிறாள். ஒண்ணிலுமே ஆர்வம் இல்லாம இருக்கியே மன்னி ஏன் என்கிறாள். தனிமையெனும் இருட்டில் வரும் அருணா எதையும் ஆழமாக சிந்தித்து திட்டமிடுபவள். உணவு சமைப்பதாகட்டும், இனிப்புகள் தயார் செய்வதாகட்டும், இனிப்பு மணி 2 மணிக்கு செய்யச் சொல்லி உண்ணும் கணவன். அவள் சமையலை ரசித்து உண்பவன். அருணா வீணை இசைப் பிரியை. கணவன் மாதத்தில் 20 நாள் வெளியூர் பயணம். படம் தியேட்டரில் வந்தால், உடனே புக் செய்து கணவனையும் அலுவலகத்தில் இருந்து நேரே தியேட்டருக்கு வரச்சொல்லி பார்ப்பாள்.

**அம்மா:** "அப்பாவின் குணத்துக்கும், தந்தைக்கும், ஊரை ஏய்க்கும் நரித்தனத்துக்கும் அம்மாஇந்த வீட்டுக்குள் இருந்து கொண்டே தண்டனை தந்தாள். அவளைச் சிறைப்படுத்திய அவர் தான் கைதியைப் போல் தவித்தார். அப்படிப்பட்டவள் அந்த கிழிந்தப் பாயில் எல்லாவற்றையும் இழந்தவள் போல் அழுது கொண்டிருந்தாள்"[5]. அம்மா சொல்கிறாள் ஷைலி வானத்தில் உள்ள ஒவ்வொரு நட்சத்திரமும் பிணம் தின்னிக் கழுகு போல இருக்கும் – கழுகோட மூக்கு போல ஒவ்வொன்றும் மின்னுகிறது பாரு. இவை அனைத்தும் நட்சத்திரங்கள் அல்ல. புரியாத மகள். அம்மா மகளிடம் கூறும்போது உன் தந்தை பீகாரில் பெரிய மனிதர். எனக்கு அவர் வெறும் பிணம் தின்னிக் கழுகு என்கிறாள்.

**மகள்:** "நான் எதுக்காக அழுகிறேன்? ஒருநாள் நடனம் ஆடிவிட்டு வந்ததும் சலங்கையைத் தூக்கி எறிந்துவிட்டு, நிலைப்படியை அடைத்துக்கொண்டு நின்ற அப்பா உதிர்த்த சொற்களுக்கா இன்று அழுகிறேன். மயிர் அடர்ந்த மார்பைத் தட்டி, நீ என் பெண்ணா அல்லது கூத்தியா? என்று அப்பா சொன்னதா இன்று வலிக்கிறது, கூடவே படித்த பையன் திருமணமானதும் 5 தன் மனைவியை என்னுடன் அறிமுகப்படுத்தாமல் போனதற்காக அழுகிறேன்"[6] என்று கதறும் ருக்மா ஒவ்வொரு குளிர்காலத்திலும் ராஜனுக்கு கை வலிக்க ஸ்வெட்டர் பிண்ணித்தரும் ருக்மாவைப் பார்த்து – பழகிய பெண்களை எல்லாம், திருமணம் செய்துக்கொள்ள முடியுமா? என்ன என்று கேட்ட இராஜனின் காதல் முறிவுக்கா அழுகின்றேன். தன்னிடம் பழகும் ரங்கா தன்னை அவமதிப்பதாலா அழுகிறேன் என்று கேட்கும் முருகன் அமைதியின்மை.

எது சுதந்திரம் எனும் ருக்குவின் கேள்விக்கு வாழ்க்கை தான். சிகப்பு தோல் உரியக் கிடக்கும் பச்சைக் குழந்தை, அத்துடன் ஓடும் யமுனை, எங்கோ கதறும் ஒரு சோகம், விரிக்கும் புன்னகை, வானத்தில் சத்தமிடும் இடி, என்ற வாழ்க்கைதான் அவளின் பிணைப்பு. எந்த தனிமனிதனிடமும் இல்லை. இதுதானே சுதந்திரம்? என்கிறாள் ருக்கு.

**அடக்குமுறையின் ஒரு வடிவம்:** பிரேமா அவர்கள் கூறும்போது – தந்தை வழிச் சமூகம் – என்பது பெண்களை அடக்கி ஆள்வதும், ஆண்கள் தங்களின் விருப்பு வெறுப்பிற்கு ஏற்பதான் பெண்களைப் பயன்படுத்தி வருகின்றனர் என்கிறார். மேலும் தந்தை வழிச் சமூகம் என்பது வன்முறையாலேயே காக்கப்பட்டுள்ளது என்கிறார். எனவே, பெண்களுக்கு எதிரானவர்கள் ஆண்கள் என்று சித்தரிக்கப்படுகின்றனர். குடும்பம், பொருளாதாரம், அரசியல் மற்றும் பாலுறவு போன்றவற்றில் ஆண்களே முடிவெடுக்கின்றனர். எனவே தந்தை வழிச் சமூகம் வன்முறையாலே கட்டமைக்கப்பட்டுள்ளது. ருக்மா தன் ஆண் நண்பனை கேள்வி கேட்கிறாள்.

**பாதிக்கப்பட்ட பெண்:** "இங்கு இருக்கிற நாற்பத்திரண்டு சங்கமும் வந்தாச்சு என்கிட்ட கூட்டத்துல நிறையப் பேசியாயிடுச்சி. எழுதியாயிடுச்சி. மராட்டி பேசச் தெரிந்தவங்க, சிகரெட் பிடிக்கிற பொம்பளைக, வெள்ளைப் புடவைக்காரங்க, எங்க கட்சி இதை எடுத்துக்கிட்டு வாதாடும்னு சொன்னவங்க எல்லாரும் வந்துட்டு போறாக தமிழப் பத்திகைக்காரர் கூட வந்தாரு ஒருத்தரு. இதுதான் நியூசாம்"[7] என்று ரோசி கூறும்போது சைலுவைப் பார்த்து அண்ணி நீங்க எனக்கு உபதேசம் பண்ணக்கூடாது.

**சமதர்மப் பெண்ணிய வாதிகள்** – என்றழைக்கப்படுபவர்கள் சீர்திருத்த பிரச்சாரங்களைச் செயற்பாடாகக் கொண்டிருந்தனர். இவர்களின் பிரச்சாரங்கள் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தப் பயன்பட்டதோடு இயக்கத்தை வளர்ப்பதற்கும் உதவின. இவர்கள் இடைக்காலத் திட்டங்கள் வகுத்துச் செயல்பட்டனர். தங்களுக்கென்று முடிந்த முடிவான திட்டங்களை வைத்துக் கொள்ளவில்லை. அவ்வகையில் அம்பையின் படைப்புகள் சமதர்மப் பெண்ணிய வகையில் அவரின் படைப்புகள் அடங்கும் தாயாக, மகளாக, காதலியாக, தாய்மகளாக இவ்வாறாக ஆணாதிக்க சமூகத்திடம் இருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள எவ்வாறெல்லாம் என்பதை – தான் வளர்ந்து வந்த வாழ்க்கை தனக்கு கிடைத்த பல்கலைக்கழக பேராசிரியர் பதவி ஆய்வு மாணவி எனும் முறையில் புணை கதைகளில் புகுத்தியுள்ளார்.

இவர் பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியர் மற்றும் அவர்களது கல்வி மூலம் மேலை நாட்டுப் பெண்ணியவாதிகளின் கருத்தைப் படித்துணர்ந்து குடும்பப் பெண்கள் / மற்றும் பல்கலைக்கழகம் படித்தப் பெண்களின் துன்பத்திற்கு ஆண்கள் எவ்வாறு காரணமானவர்கள், பாலியல் வன்முறை – போன்றவற்றை தன் சிறுகதை மூலம் பதிவு செய்துள்ளார்.

**துணைநூற்பட்டியல்**


1. அம்பை கதைகள் (1972-2014) – 42 ஆண்டுக் கதைகள், காலச்சுவடு பதிப்பகம், வெளியீடு 2019.
2. பெண்ணியம் அகலமும் ஆழமும் – பேராசிரியர் இரா.பிரேமா, காவ்யா பதிப்பகம், வெளியிடு 2015.
3. அம்பை கதைகள் – சூரியன், பக்கம்.15.
4. அம்பை கதைகள் – சிறகுகள் முறியும், பக்கம்.94.
5. அம்பை கதைகள் – வல்லூறு, பக்கம்.82
6. சஞ்சாரி, பக்கம்.74.
7. கருப்பு குதிரை சதுக்கம், பக்கம்.234